



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






வெள்ளி ❖ ஜூலை. 07, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 273 ❖ ரூ.10


### பாஜகவை எதிர்ப்பவர்களை C.B.I., I.T., E.D-யை வைத்து மிரட்டுகிறது மத்திய அரசு

# குற்றச்சாட்டு

## சிவில், கிரிமினல் சட்டங்கள் இருக்கையில். அதை நீக்கிவிட்டு பொது சிவில் சட்டம் கொண்டுவர முயற்சிப்பதாக முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்



**சென்னை, ஜூலை. 7–**

**பாஜகவை எதிர்க்கக் கூடியவர்களை எல்லாம் சிபிஐ, அமலாக்கத்துறைகளை வைத்து மிரட்டி கொண்டிருக்கும் ஒரு ஆட்சி இன்றைக்கு மத்தியில் நடந்து கொண்டிருக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திருமண விழாவில் கலந்துகொண்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசுகையில், "வழக்கமாகத் தொடர்ந்து பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிற காரணத்தால், பெரும்பாலும் குடும்பத்தாரோடு அதிக நேரம் எங்களைப் போன்றவர்கள் செலவு செய்ய முடியாது என்கிற ஒரு ஆதங்கம் எல்லோர் குடும்பத்திலும், குறிப்பாக கழகக் குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் உண்டு. என்னுடைய குடும்பத்திற்கும் நிச்சயம் இருக்கும். ஆனால் இந்தத் திருமணத்தின் மூலமாக ஓரளவிற்கு அந்த ஆதங்கம் குறைந்திருக்கும் என நான் கருதுகிறேன்.

மணக்கோலம் கொண்டிருக்கும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று, சிறப்போடு வாழ்ந்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாடு போய்க்கொண்டிருக்கும் நிலைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்லாட்சி உருவாக்கித் தருவதற்கு நீங்கள் எந்த அளவிற்குத் துணை நின்றீர்களோ, அந்த ஆட்சி 'திராவிட மாடல்' ஆட்சியாக இன்றைக்கு எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ. தேர்தல் நேரத்தில் வழங்கிய உறுதிமொழிகளை – வாக்குறுதிகளை எல்லாம் எந்த அளவிற்குத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறதோ, அதுபோல் இந்திய நாட்டிற்கு ஒரு ஆட்சி தேவை.

காரணம், இன்றைக்கு ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி பாஜக ஆட்சி. அந்த பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து இன்று வரையில் தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களையும் நிறைவேற்ற முன்வரவில்லை; அதற்கு நேர்மாறாக மக்கள் விரோதப் போக்கோடு மதத்தை, சனாதனத்தை இன்றைக்கு மக்களிடத்தில் திணித்து, ஒரு சர்வாதிகார ஆட்சியை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில்கூட ஒரு சட்டத்தை கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள்; 'பொது சிவில் சட்டம்'. நாட்டில் ஏற்கனவே சிவில் சட்டம், கிரிமினல் சட்டம் என்ற சட்டங்கள் இருக்கிறது. அதை நீக்கிவிட்டு பொது சிவில் சட்டமாக கொண்டு, வந்து பாரதிய ஜனதா கட்சியின் கொள்கைகளை, அந்த ஆட்சியை எதிர்க்கக் கூடியவர்களை எல்லாம் பழிவாங்க வேண்டும் என்கிற நோக்கத்தில், மக்களுக்குத் துன்பங்களை, கொடுமைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற அந்தத் தீய சக்தியோடு இன்றைக்கு அவர்கள் செய்து கொண்டிருக்கும் இந்தக் காரியங்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே அரசியல்வாதிகளை, அவர்களை எதிர்க்கக் கூடியவர்களை எல்லாம் C.B.I., I.T., E.D., என்ற அந்தத் துறைகளை எல்லாம் வைத்து மிரட்டி கொண்டிருக்கும் ஒரு ஆட்சி இன்றைக்கு மத்தியில் நடந்து கொண்டிருக்கிறது.

இங்கேகூட இந்தத் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறபோது, இது குடும்பக் கட்சியாக, எங்கள் குடும்பத்தில் நடைபெறும் திருமணமாக நடக்கிறது என்றெல்லாம் பெருமையோடு சொன்னார்கள். இதை கேட்டால், இன்றைக்கு மத்தியில் இருக்கும் பிரதமருக்கு கோபம்கூட வந்துவிடும். ஏனென்றால் மத்திய பிரதேசத்தில் சென்று, நம்முடைய பிரதமருக்கு திமுகவின் நினைவுதான் வந்திருக்கிறது. அங்கே போய் என்ன பேசியிருக்கிறார் என்றால், குடும்பத்தின் வளர்ச்சிக்காக ஆட்சியில் இருக்கிறார்கள், கட்சி நடத்துகிறார்கள் என்று விமர்சனம் செய்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் அடுத்த நாளே, இதே மண்டபத்தில் நடந்த ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகிறபோது, நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இது குடும்பக் கட்சிதான். அண்ணாவால் உருவாக்கப்பட்ட – கருணாநிதியால் வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் என்பது குடும்பக் கட்சிதான். இன்னும் சொல்ல போனால், தமிழகமே திமுகவின் கட்சிதான். தமிழகமே கருணாநிதி குடும்பம்தான் என்று அன்றைக்கே நான் அழுத்தம் திருத்தமாக சொன்னேன்.

எனவே அப்படிப்பட்ட குடும்பத்தில் இன்றைக்கு நடைபெறும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்." இவ்வாறு முதல்வர் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கொத்தமங்கலம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இடி, மின்னலுடன் பெய்த கனமழையின் போது தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த கோபி என்பவரின் மனைவி வித்யா இடி, மின்னல் தாக்கியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததைத் தொடர்ந்து நேற்று அவரது இல்லத்திற்கு நேரில் சென்ற சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அரசின் நிவாரண உதவித் தொகையான ரூபாய் 4.00 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார், உடன் மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் தாமதமாவதற்கு ஆளுநரே காரணம் உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி

**சென்னை , ஜூலை. 7–**

**ஆளுநர் ஒப்புதல் அளிக்காததால் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்று உயர்கல்விதுறை அமைச்சர் பொன்முடி குற்றம் சாட்டி உள்ளார்.**



சென்னை, தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களை சந்திதார். அப்போது பேசிய அவர், "தமிழகத்தில் சில பல்கழைக்கழங்களில் துணை வேந்தர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்ப சட்டப்படி தமிழக அரசு குழு அமைத்திருக்கிறது. எனினும், அந்த குழுவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் தராமல் இருக்கிறார். துணை வேந்தர்கள் தேடுதல் குழுவில் சட்டப்படி சிண்டிகேட் உறுப்பினர் ஒருவர், தமிழக அரசு உறுப்பினர் ஒருவர், ஆளுநர் தரப்பில் ஒருவர் என 3 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், பல்கலைக்கழக மானியக் குழு சார்பில் ஒரு உறுப்பினரை சேர்க்க வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்துகிறார். அதற்கு பல்கலைழக்கழக சட்டத்தில் இடம் இல்லை. தேர்வுக் குழுவில் ஆளுநர் தனது ஆதிக்கத்தை செலுத்த வேண்டும் என்பதற்காக இது போன்று வலியுறுத்துகிறார்.

பல்கலைழக்கழக விவகாரங்கள் தொடர்பாக தமிழக அரசுக்கு எதிராக ஆளுநர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். பல்கலைக்கழங்களில் தவறு ஏதும் இருப்பின் அமைச்சர் என்ற முறையில் என்னிடம் தெரிவித்திருக்கலாம் அல்லது துறையின் செயலரிடம் தெரிவித்திருக்கலாம். மாறாக, பத்திரிகைகளில் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏன் வருகிறது? ஏனெனில், ஆளுநர் அரசியல் செய்கிறார்.

சிண்டிகேட் கூட்டத்தை தலைமை செயலகத்தில் நடத்தக் கூடாது என்று ஆளுநர் கூறுகிறார். ஆனால், நாகை மாவட்டத்தில் உள்ள மீன்வள பல்கலைக்கழக மாணவர்கள் ஆளுநர் மாளிகைக்கு வந்து பட்டங்களை பெற வேண்டும் என்று ஆளுநர் கூறியுள்ளார். இப்படி கூறிய ஆளுநர், சிண்டிகேட் கூட்டத்தை பற்றி பேச தனக்கு தகுதி உள்ளதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

பல்கலைக்கழங்கள் தன்னிச்சையாக செயல்படவில்லை என்று ஆளுநர் கூறுகிறார். ஆனால், பல்கலைக்கழகங்களுக்கு எல்லா விதமான அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. என்னுடைய தலைமையில் நடைபெற்ற துணை வேந்தர்கள் மாநாட்டில் காலி பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பதிவாளர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஆளுநர் என்ன நடக்கிறது என்பதை முழுமையாக தெரிந்து கொண்டு பேச வேண்டும். கல்வித்துறை மட்டுமல்லாமல், மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசை மதிக்காமல் எல்லா துறைகளிலும் ஆளுநர் தலையிடுகிறார்." இவ்வாறு அவர் கூறினார்.

# ஆய்வுக் குழுவுக்கு எதிராக போராடிய பரந்தூர் கிராம மக்கள் கைது: தினகரன் கண்டனம்

**சென்னை , ஜூலை. 7–**

**"ஜனநாயக முறையில் போராடிய பரந்தூர் கிராம மக்கள் கைது செய்யவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் ஆய்வுக்காக ஏற்படுத்தப்பட்ட குழு, முன்பே திட்டமிடப்பட்ட முடிவுகளை மனதில் வைத்துக்கொண்டு, பெயரளவுக்கு ஓர் ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக வந்த செய்தியை அறிந்து, அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனநாயக முறையில் போராடிய கிராம மக்கள் கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

பரந்தூர் விமான நிலைய பகுதியில் உள்ள நீர்நிலைகளின் பாதுகாப்பு குறித்தும், அதன் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்தும் ஆராய அரசால் தேர்வு செய்யப்பட்ட நிறுவனம் முறையான வகையில் ஆய்வை மேற்கொள்ளாமல் ஒப்புக்கு ஆய்வை நடத்தவுள்ளதாக வந்த செய்தியை அறிந்து, பரந்தூரில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் பரந்தூர்–ஸ்ரீபெரும்புதூர் இடையே ஊர்வலமாக செல்ல முயன்றபோது போலீசார் அவர்களை பலவந்தமாகத் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது விவசாயிகளின் காவலராக காட்டிக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் புதிய விமான நிலைய திட்டத்தை செயல்படுத்த ஒற்றைக் காலில் நிற்பதும், இத்தனை நாட்களாக போராடிவரும் மக்களை உதாசீனப்படுத்துவதும், விமான நிலையத்துக்கு மாற்று வழிகளைப் பற்றி சிந்திக்க மறுப்பதும் ஏன் என அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே, பரந்தூர் மக்களும் தமிழ்நாட்டு மக்கள்தான், வேற்றுக் கிரக வாசிகள் அல்ல என்பதை முதல்வர் உணர்ந்து அவர்களது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதோடு, ஜனநாயக முறையில் போராடியவர்களை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுவித்திட உத்தரவிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்" என்று டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

# அதி கனமழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு கேரளா, கடலோர கர்நாடகா, கோவாவுக்கு ரெட் அலர்ட்

**புதுடெல்லி , ஜூலை. 7–**

**கேரளா, கடலோர கர்நாடகா மற்றும் கோவாவுக்கு நேற்று ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது இந்திய வானிலை ஆய்வு மையம். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலான அலர்ட் இது. இம்மூன்று மாநிலங்களிலும் அதி கனமழையால் மக்களின் இயல்புவாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.**



கேரளாவைப் பொறுத்தவரை மாநிலத்தின் பல பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. ஒரு சில பகுதிகளில் ஆரஞ்சு அலர்ட்டும், ஒரு சில பகுதிகளில் ரெட் அலர்ட்டும் விடுக்கப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 11 மாவட்டங்களில் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பல்வேறு ஆறுகளும் கரைபுரண்டோடுகின்றன.

**கோவாவுக்கும் ரெட் அலர்ட்:** கோவா மாநிலத்துக்கும் கடலோர மாவட்டங்கள் மட்டுமல்லாது உள் மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் கடல்நீர் உட்புகுதல், மரங்கள் முறிந்து விழுதல் போன்ற சம்பவங்களுக்கு வாய்ப்புள்ளதாக மாநில அரசு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதி கனமழையின்போது சாலைகளில் எதிர்வரும் வாகனங்கள் தெரிவதில் சிக்கல் இருக்கும் என்றும், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் குறுகிய கால தடை இருக்கலாம் என்றும் அறிவித்துள்ளது.

**கர்நாடகாவில் இருவர் பலி:** கர்நாடகா மாநிலத்தில் கனமழை காரணமாக இதுவரை இருவர் உயிரிழந்துள்ளனர். பெங்களூருவுல் இன்றும் பலத்த காற்று வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. தெற்கு உள் பகுதிகள், வடக்கு உள் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பருவமழை காலத்தில் பலத்த காற்று இயல்பானதே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உத்தராகண்ட் மாநிலத்துக்கு ஜூலை 10 வரை எச்சரிக்கை:** உத்தராகண்ட் மாநிலத்தில் ஜூலை 6) தொடங்கி வரும் 10 ஆம் தேதி வரை மழை, ஆங்காங்கே வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்கு வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அம்மாநிலத்துக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளது.

**குஜராத்தில் ஐந்து நாட்களுக்கு மழை வாய்ப்பு:** அடுத்த ஐந்து நாட்களுக்கு குஜராத்தில் மழைக்கு பரவலாக வாய்ப்புள்ளதாக அகமதாபாத் வானிலை மைய இயக்குநர் மனோரமா மொஹாந்தி தெரிவித்துள்ளார். மாநிலம் முழுவதும் பரவலாக மழை இருக்கும். சில இடங்களில் கனமழை முதல் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக சவுராஷ்டிராகச் பகுதியில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளது என்றும், அகமதாபாத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**பிஹாரில் மின்னல் தாக்கி 15 பேர் பலி:** கனமழை ஒருபுறம் மக்களின் இயல்பு நிலையைப் புரட்டிப்போட, இன்னொரு புறம் பிஹாரில் மின்னல் தாக்கி பலர் உயிரிழந்தனர். மின்னல் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணத் தொகையை முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்தார்.

**முன்கூட்டியே வந்த தென்மேற்கு பருவமழை:** கடந்த 2–ஆம் தேதி (ஜூலை 2) இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை ஒருவாரத்துக்கு முன்னதாகவே வந்துவிட்டதாகத் தெரிவித்தது. மேலும், ஜூலை மாதத்தில் பருவ மழை இயல்பான அளவிலேயே இருக்கும். உத்தரப் பிரதேசம், பிஹார் மட்டும் இதற்கு விதிவிலக்கு என்று கூறியிருந்தது இங்கே நினைவுகூரத்தக்கது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அதிமுக எம்.பி. ரவீந்திரநாத் வெற்றி செல்லாது சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு



சென்னை,ஜூலை.07-

கடந்த 2019-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேனி மக்களவைத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு எம்.பி ரவீந்திரநாத் வெற்றி பெற்றது செல்லாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேனி தொகுதி வாக்காளர் மிலானி தொடர்ந்த தேர்தல் வழக்கில் உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

2019-ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில், தேனிதொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஓ.பி.ரவீந்திரநாத் வெற்றி பெற்றார். அவரது வேட்புமனுவில், சொத்து விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை மறைத்துள்ளார். எனவே, தேனி தொகுதியில் அவர் வெற்றிபெற்றதைசெல்லாது என அறிவிக்க வேண்டும் எனக்கோரி தேனிதொகுதி வாக்காளரான மிலானி என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், "தனக்கு வாக்களிக்க, வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து ரவீந்திரநாத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். பணப்பட்டுவாடா புகாரின் பேரில், வேலூர் தொகுதி தேர்தல் தள்ளிவைக்கப்பட்ட நிலையில், தேனி தொகுதியிலும் அதிக பணப்பட்டுவாடா நடந்தும், தேர்தல் தள்ளிவைக்கப்படவில்லை" என்று கூறியிருந்தார். ஆனால் இந்தத் தேர்தல் வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. எனவே வழக்கை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என ரவீந்திரநாத் நிராகரிப்பு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அவரதுகோரிக்கையை ஏற்கமறுத்தஉயர்நீதிமன்றம், ரவீந்திரநாத்தின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது. இதனைத்தொடர்ந்துஇந்த வழக்கு விசாரணைக்காக, மூன்று நாட்கள் நேரில் ஆஜரான ரவீந்திரநாத்தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து சாட்சியம் அளித்திருந்தார். தேர்தல் ஆணைய அதிகாரிகள் உள்ளிட்டோரும் நேரில் ஆஜராகி சாட்சியம் அளித்திருந்தனர். இந்த வழக்கில் வாதங்கள் நிறைவடைந்த நிலையில், வழக்கை தேதி குறிப்பிடாமல்தீர்ப்புக்காக ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் வழக்கு, நீதிபதி எஸ். எஸ்.சுந்தர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கில் நீதிபதி பிறப்பித்த தீர்ப்பில், "இதுவரை இந்த வழக்கில் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில், 2019-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத்தேர்தலில், தேனி நாடாளுமன்ற தொகுதியில்போட்டியிட்டு வெற்றி பெற்ற ஓ.பி. ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது" என்று தீர்ப்பளித்தார்.

இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஏதுவாக இந்த தீர்ப்பை 30 நாட்களுக்கு நிறுத்திவைக்க வேண்டும் என்று ரவீந்திரநாத் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இந்த தீர்ப்பை 30 நாட்களுக்குநிறுத்திவைத்து உத்தரவிட்டார். எனவே,30நாட்களுக்குஇந்த தீர்ப்பு அமலுக்கு வராது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு, கவிதை போட்டிகள் 9 மாணவர்கள் தேர்வு



புதுக்கோட்டை ஜூலை,7

பள்ளி மாணவர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் 11,12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சித்துறையால் ஆண்டுதோறும் கட்டுரை,பேச்சு, கவிதைப்போட்டிகள் நடத்தி பரிசுகளும்,பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் 2022-2023 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நேற்று புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் நடைபெற்றது.

வந்திருந்த அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர்சாலைசெந்தில் வரவேற்று பேசினார். இப்போட்டியினை புதுக்கோட்டை மாவட்ட தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் ஜ.சபீர்பானு தலைமை தாங்கி தொடங்கி வைத்து போட்டியின் முக்கியத்துவம் குறித்து பேசினார். இந்நிகழ்வில் முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ராஜு, பள்ளித்துணைஆய்வாளர் வேலுச்சாமி ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். இப்போட்டியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 130க்கும் மேற்பட்ட பள்ளிகளின்மாணவர்கள் பங்கேற்றனர். நடுவர்களாக உதவிபேராசியர்கள் தமிழ்செல்வி, குறிஞ்சி, மோகனசுந்தரம், கோவிந்தன், யோகாம்பாள், பழ.அன்பரசி,சோபனா, தேன்மொழி அரசி, கௌரவ விரிவுரையாளர் ஹேம்மாலினி ஆகியோர் செயல்பட்டனர்.

கட்டுரைப் போட்டியில் பொன்னமராவதி, லயன்ஸ்மெட்ரிக்குலேசன் பள்ளியில் 11- ம் வகுப்பு படிக்கும்பொ.தேஜன்யா முதலிடமும், பொன்னமராவதி அமல அன்னை மெட்ரிக்குலேசன் பள்ளியில் 12 - ம் வகுப்பு படிக்கும் மு.நிவேதா இரண்டாம் இடமும், கீரனூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 12 - ம் வகுப்பு படிக்கும் ஆ.கரிஷ்மாரோஸ் மூன்றாம் இடமும் பெற்றனர்.

பேச்சுப்போட்டியில் விராலிமலை விவேகா மெட்ரிக்குலேசன் பள்ளியில் 12- ம் வகுப்பு படிக்கும் சி.நிரஞ்சனா முதலிடமும், ஏ.மாத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11 -ம் வகுப்பு படிக்கும் பா.மகாலெட்சுமி இரண்டாம் இடமும், பொன்னமராவதி வலம்புரி வடுகநாதன் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் 12- ம் வகுப்பு படிக்கும் க.சுரேஷ்குமார் மூன்றாம் இடமும் பெற்றனர்.

கவிதைப்போட்டியில் விராலிமலை விவேகா மெட்ரிக்குலேசன் பள்ளியில் 12- ம் வகுப்பு படிக்கும் மாணவி செ.செந்தமிழ் முதலிடமும், கைக்குறிச்சி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் 11-ம்வகுப்புபடிக்கும்கு.பூஜா இரண்டாம் இடமும், புதுக்கோட்டைவைரம்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 12- ம் வகுப்பு படிக்கும் சு.ஜோஷிகா மூன்றாம் இடமும் பெற்றனர். அதனைத்தொடர்ந்து ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசாக ரூபாய் 10 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ7 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ5 ஆயிரமும் மற்றும் பாராட்டு சான்றிதழும் மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட உள்ளது. நிறைவாக தமிழ் வளர்ச்சித்துறை உதவியாளர் கி.சுப்புராமன் நன்றி கூறினார்..






தென்காசி வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளராக நியமிக்கபட்ட டி.எம்.எஸ் முகேஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் ராஜராஜன்,எஸ்எம். ராஜ், ராயல் கார்த்திக், மணிகண்டன், அன்சாரி, ஆகியோர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் ராஜா எம்எல்ஏவை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



திருவரங்குளம் ஊராட்சி நிம்பனேஸ்வரம் கிராமத்தில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 12 லட்சத்தில் குடி தண்ணீர் நீர் தொட்டி கட்டு அடிக்கல் நாட்டு விழா தமிழ்நாடு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். விழாவில் ஆலங்குடி தாசில்தார் விஸ்வநாதன் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆயிஷாராணி வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சிகள், கோகுல கிருஷ்ணன் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் அரு.வடிவேல் திருவரங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம், ஒன்றிய கவுன்சில் சிதம்பரம் , வேப்பங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் ராஜாங்கம் காயம் பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி ராமதாஸ் ,திமுக நிர்வாகிகள் பொருளாளர் ஜெய்சங்கர் ,அவைத் தலைவர் வல்லத்ரா கோட்டை சுரேஷ் நிம்ப பனேஸ்வரம் திமுக கிளைச் செயலாளர் காயாம்பு பொன்னையா மகளிர் அணி சாந்தி மற்றும் திமுக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



திருவரங்குளம் அருகே உள்ள பூவரச குடி செந்தலை அய்யனார் கருப்பர் கோவில் சந்தன காப்பு திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் விரதம் இருந்து பால்குடம் காவடி எடுத்தும் வேண்டுதலை நிறைவேற்றி தரிசனம் செய்தனர். இன்னுவாக சிந்தனை அய்யனார் கருப்பர் மிக்க மரியாதை உங்களுக்கு சந்தன காப்பு அலங்காரம் நடைபெற்றது, இரவு கோவில் முன்பாக கிராமிய தெம்மாங்கு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ஏற்பாடுகளை பூவரசக்குடி தெற்கு தெரு முட்டியார்கள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளியில் புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்வு நடைபெற்றது



புதுக்கோட்டை, ஜூலை.7-

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும் புதுக்கோட்டை புத்தகத் திருவிழா 2023 வை முன்னிட்டு வரவேற்புக்குழுத்தலைவர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டம் முழுவதும்உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவர்கள் பங்கேற்கும் புதுக்கோட்டை வாசிக்கிறது" என்ற நிகழ்வு நேற்று முற்பகல் 11.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெற்றது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில்ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் சுமார் ஆயிரம் பேர் பள்ளி வளாகத்தில் அமர்ந்து பள்ளி நூலகத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்றசங்கஇலக்கியங்கள், பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டைகல்யாண சுந்தரனார், கண்ணதாசன் கவிதைகளையும் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கந்தர்வன் சிறுகதைகளையும் சிறுவர் கதை களஞ்சியம் போன்ற தங்களுக்குப் பிடித்தமான நூல்களை ஆர்வமுடன் வாசித்தனர்.

பள்ளியின் முதல்வரும், புதுக்கோட்டை புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான கவிஞர்தங்கம்மூர்த்திகூறும் போது முதல் முறையாக புத்தகத் திருவிழா புதுக்கோட்டையில் தொடங்கிய ஆண்டிலிருந்து புதுக்கோட்டைவாசிக்கிறது நிகழ்வில் எங்கள் பள்ளி மாணவர்கள் தொடர்ந்து பங்கேற்கிறார்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஓரிடத்தில் அமர்ந்து விரும்பிய நூல்களை வாசித்தார்கள், பள்ளி மாணவர்கள் பாடப்புத்தகங்களைத் தாண்டி பொதுவான நூல்களை வாசிப்பதால் மட்டுமே வாழ்க்கைக்குத் தேவையான அறத்தை, அறிவை, சான்றோர்களின் அனுபவங்களை அறிந்து தெளிவு பெற முடியும். இளமையில் கல் என்ற வாக்கிற்கிணங்க வாசிக்கும் பழக்கத்தை அறிய, நூல்களை நேசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள இந்த புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்வு பெரிதும் உதவுகிறது என்று குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் பள்ளியின் துணைமுதல்வர்குமாரவேல், ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி, கோமதி, மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் காசாவயல் கண்ணன், உதயகுமார், செல்வராஜ்,ராமன் உடற்கல்வி ஆசிரியர்கள் நீலகண்டன், விசாலி மற்றும் பெரும்பாலான ஆசிரியகளும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை புத்தகத் திருவிழா

# குளத்தூர் மகாத்மா தொடக்கப்பள்ளி மாணவர்கள் அரசு நூலகத்தில்புத்தகம் வாசித்தனர்



புதுக்கோட்டை, ஜூலை.7-

புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்ச்சி குளத்தூர் மகாத்மா மழலையர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி மாணவர்கள் அரசு நூலகத்தில்புத்தகம் வாசித்தனர் நிகழ்வில் நூலகர் ,பள்ளியின் தாளாளர் ரவிச்சந்திரன் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் . 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டுநடைபெற்ற புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை வரும் ஜூலை 28-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 6-ஆம் தேதி வரை நடத்தவுள்ளது.

திருவிழாவையொட்டி நடைபெற்ற ‘புதுக்கோட்டை வாசிக்கிறது’ நிகழ்ச்சியில் ஒரே நேரத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர், நேற்று முற்பகல் 11 மணிக்குத் தொடங்கி 12 மணி வரை புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், குளத்தூர் மகாத்மா மழலையர்கள் மற்றும் தொடக்கபள்ளி மாணவர்கள் அரசு நூலகத்தில்புத்தகம் வாசித்தனர் நிகழ்வில் நூலகர் ,பள்ளியின் தாளாளர் ரவிச்சந்திரன் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள், வாசகர்கள், பங்கேற்றனர்.

# ஆலங்குடியில் கட்டையால் தாக்கி தந்தையை கொன்ற மகன் கைது



ஆலங்குடி,ஜூலை.07-

ஆலங்குடியில் குடும்ப பிரச்சினை மற்றும் சொத்து பிரச்சனை காரணமாக தந்தை மகனுக்கு இடையே ஏற்பட்ட தகராறில் தந்தையை கட்டையால் அடித்துக் கொன்ற மகனை போலீசார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மேல சுண்ணாம்பு கார தெருவை சேர்ந்தவர் செல்லையா மகன் சந்திரமோகன் (55). இவர் கொத்தனாராக வேலை செய்து வந்தார், இவரது மகன் சதீஷ் இவருக்கு திருமணம் ஆகி ஒரு குழந்தை உள்ளது. இந்த நிலையில் சதீஷின் மனைவி கணவனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அவரது அப்பா வீட்டில் கடந்த ஓராண்டு காலமாக இருந்து வருகிறார். இது சம்பந்தமாக சந்திரமோகனுக்கும் சதீஷ்க்கு இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டு வந்துள்ளது.

மேலும் தனக்குரிய சொத்தை பிரித்து தருமாறு சதீஷ் அடிக்கடி சந்திரமோனிடம் சண்டையிட்டு வந்துள்ளார்,இந்நிலையில் அவரது மனைவியை அழைத்து வருமாறு சதீஷிடம் சந்திரமோகன் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து சதீஷ் கோபமாகவீட்டைவிட்டு வெளியேறியுள்ளார். மீண்டும் இரவு 11 மணி அளவில் சதீஷ் வீட்டிற்கு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் சந்திர மோகன் மனைவி வைரம் எழுந்து பார்த்தபோது சந்திரமோகன் கட்டையால் தாக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய நிலையில் இருந்துள்ளார். இதனை பார்த்ததும் வைரம் கதறி அழுதுள்ளார். இதனையடுத்து அக்கம்பக்கத்தினர் சந்திரமோகனை மீட்டு ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சந்திரமோகன் பரிதாபமாகஉயிரிழந்தார். இது குறித்து ஆலங்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து சதீஷை கைதுசெய்தனர். இரவு நேரத்தில் வீட்டிற்குள் வைத்து தந்தையை மகன் அடித்துக்கொலைசெய்த சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அதிமுக ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த, வடசென்னை வடக்கு மேற்கு மாவட்ட செயலாளர் கொளத்தூர் டி.கிருஷ்ணமூர்த்தியின் சகோதரர் டி.செல்வராஜ், நிர்மலா செல்வராஜ் ஆகியோரது இல்ல மஞ்சள் நீராட்டு விழா சென்னை, கொளத்தூர், இலட்சுமிபுரத்தில் உள்ள ஜிபிஎல் திருமண மஹாலில் நடைபெற்றது. மஞ்சள் நீராட்டு விழாவில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு செல்வி எஸ்.என்.தீபிகா-வை வாழ்த்தினார். விழாவில், பண்ருட்டி ச.இராமச்சந்திரன், ஜே.சி.டி.பிரபாகர், பி. ஹெச்.பி.மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் தொகுதியில்

# இலவச பட்டா கொடுப்பதில் குளறுபடி. மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்த தொகுதி மக்கள்

காரைக்கால்,ஜூலை.7

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இலவச மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. இலவச மனை பட்டா வழங்குவதில் கணவனை இழந்தோர், கணவனால் கைவிடப்பட்டோர், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் என பல்வேறு தரப்பினருக்கு இலவச மனை பட்டா புதுச்சேரி அரசால் வழங்கப்பட்டு வருகிறது.




இந்நிலையில் புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்காவின் தொகுதியான நெடுங்காடு தொகுதியில் மனைப்பட்டா வழங்குவதில் தனது கட்சிக்காரர்கள் தனது ஆதரவாளர்கள் என அவர்களுக்கு மட்டுமே இலவசமனைபட்டாக்கள் வழங்கி உள்ளதாக குற்றம் சாட்டி நெடுங்காடு தொகுதி மக்கள் சிலர் நெடுங்காடு தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக தேர்தலை சந்தித்த டாக்டர்.விக்னேஸ்வரன் தலைமையில், ஒரே வீட்டில் இரண்டு மூன்று குடும்பம் உள்ள வீடுகளுக்கு இலவச மனை பட்டா வழங்கப்படவில்லை என்று மாவட்ட ஆட்சியரை சந்தித்துநேற்று மனு அளித்துள்ளனர்.

எனவே புதுச்சேரி முதலமைச்சர் இந்த பிரச்சனையில் தலையிட்டு உடனடியாக தகுதி உள்ள மக்களுக்கு இலவச மனை பட்டா வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்டம் கல்வித்துறை சார்பில் அரசு மேல்நிலை பள்ளிகளுக்கான பதினொன்றாம் வகுப்பு (CBS) சேர்க்கைக்காக 2023-24 ஆம் கல்வியாண்டில் விண்ணப்பித்து இடம் கிடைக்க பெறாதவர்களும் இதுவரை எந்தவொரு பள்ளியிலும் சேராத மாணவர்களுக்கும் இறுதி வாய்ப்பாக, காரைக்கால், கோவில்த்து தந்தை பெரியார் அரசு மேல்லை பள்ளியில் நேற்றும், இன்றும், ஆகிய தேதிகளில் இரண்டாம் கட்ட கலந்தாய்வு நடைபெறுகிறது. கலந்தாய்வில் முதல் சேர்க்கை ஆனையினை மேல் நிலைக்கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி , மாணவர்களுக்கு வழங்கினார்கள். இக்கலந்தாய்வில் ஒருங்கிரைப்பாளராக என்.எஸ்.சி போஸ் அரசு மேல்நிலைப் பள்ளி துணை முதல்வர் ஜெயா செயல்பட்டார்கள். இக்கலந்தாய்விற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு குறிப்பாக, விண்ணப்பங்கள் வழக்குதல், சரிபார்த்தல், கலந்தாய்வு சேர்க்கை ஆனை வழங்குதல், விண்ணப்பங்களை குறிப்பிட்ட பள்ளிகளிடம் ஒப்படைத்தல் ஆகிய குழுக்களோடு கலந்தாய்வு தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளி விரிவுரையாளர்களும் பிற அரசு மேல்நிலைப் பள்ளி விரிவுரையாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா ஆலோசனைக் கூட்டம்

தென்காசி, ஜூலை.7-

தென்காசி மாவட்டம் அகரக்கட்டு தலைமை அலுவலகத்தில் வைத்து தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழா பற்றிய ஆலோசனைக் கூட்டம் நிறுவனத்தலைவர் லூர்து நாடார் தலைமையில் நடைபெற்றது.




இதில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது பேசிய அகரகட்டுலூர்துநாடார் 1921ல் நாடார்களின் வளர்ச்சிக்காகவும், நாடார் வணிகர்களின் வளர்ச்சிக்காகவும், நாடார் வங்கி லிமிடெட் என்று தொடங்கப்பட்டு,1962 ல் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த வங்கி சமீப காலமாக பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து வருகிறது. அந்த வகையில் சில நாட்களுக்கு முன்பு வருமான வரித்துறை சோதனை நடைபெற்றது, தற்போது நாடார்களுக்கு போதிய அளவு வணிகத்திற்கு தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கடன் கொடுப்பதை தவிர்த்து வருகிறது.

ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி நாடார்கள் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் மீது ஒரு வெறுப்புணர்வு ஏற்படுகின்ற அளவுக்கு வங்கி நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும் என கூறினார், இந்நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி தலைவர் கணேசன், மத்திய மாவட்டத் தலைவர் முருகேசன், சாம்பவர் வடகரை கிளை தலைவர் மோகன், கீழப்புலியூர் கிளைத் தலைவர் முத்து நயினார், மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் மதிவளன் மெல்சியன் பிரபு பரமசிவன் மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வந்துள்ள இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான் மரியாதை நிமித்தமாக தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேரில் சந்தித்து பேசினார். அப்போது தற்போது இலங்கையில் இருக்கும் சூழல் மற்றும் தமிழ்நாடு இலங்கை நட்பு உறவு குறித்தும், இலங்கையில் தற்போது இருக்கும் சூழல், வட கிழக்கு &மலையகத் தமிழர்கள் நிலை என பல்வேறு விசயங்கள் இந்த சந்திப்பின்போது பேசியதாக கூறப்படுகிறது.





மயிலாடுதுறைமாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம் ஆக்கூர் கிராம ஊராட்சி ஆக்கூர் முக்கூட்டு என்னும் இடத்தில் டாஸ்மாக் மதுபான கடையில் (கடைஎன் 57 81) அரசு நிர்ணயிக்கும் விலையில் மதுபானம் விற்கப்படுகிறதா என்றும், ஆய்வின் போது விலைப்பட்டியல் இல்லாமல் உள்ளதை அறிந்து உடனடியாக விலை பட்டியல் வைக்க அறிவுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி உத்தரவிட்டார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம் ஆக்கூர் கிராம ஊராட்சி ஆக்கூரில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 14.5 லட்சம் செலவில் தாமரைக் குளம் தூர் வாரும் பணி மற்றும் தடுப்பு சுவர் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார். ஆய்வின் போது செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலட்சுமி, மீனா, ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித் துறையினர் உடன் இருந்தனர்.



காரைக்கால் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்வது சம்பந்தமாக மீன்வளத்துறை துணை இயக்குனர் மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று மாலை ஆய்வு மேற்கொண்டார். துறைமுகத்தின் உள்ளே உள்ள சாலைகளை சரி செய்து தரும்படியும் (ட்ரைனேஜ்) வாய்க்கால்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரி செய்து தரும்படியும் கேட்டுக் கொண்ட ஆட்சியர், மீன்களை ஏலம் விடும் சிமெண்ட் தரை பழுதாகியுள்ளதால் புதிதாக சிமெண்ட் தரை அமைத்து தரும்படியும் பொதுப்பணித்துறை அதிகாரிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார். மேலும் மீன்வளத்துறை துணை இயக்குனரிடம் துறைமுகத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளும் படியும் மேலும் இங்கு அமைந்துள்ள பொதுக் கழிப்பிடங்களை சுத்தமாக பராமரிக்கும் படியும் ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் சிதம்பரநாதன் மற்றும் மகேஷ் மீன்வளத்துறை துணை இயக்குனர் சௌந்தரபாண்டியன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.



தென்காசி கொடிமரதிடலில் தமிழ்நாடு கவர்னர் ஆர். என் ரவியை மாற்றக் கோரி மதிமுக சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி நகர் மன்றத் தலைவர் சாதிர் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மதிமுக அவைத் தலைவர் வெங்கடேசன், தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர், நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா, கம்யூனிஸ்ட் கட்சி மாரியப்பன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட, மேனாள் (ஓய்வு) பள்ளித் துணை ஆய்வாளர் மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குனர் இ.இராமமூர்த்தி, அ.இ.அ.தி.மு.க மாவட்ட இணைச் செயலாளர் மற்றும் முன்னாள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் இரா. விஜயலட்சுமி இராமமூர்த்தி மற்றும் சென்னை, இராயப்பேட்டை கே.அண்ணாமலை-உமா அண்ணாமலை ஆகியோரது இல்லத் திருமண விழா சென்னை, கொரட்டூர் மோகன் கார்டன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முன்னதாக, செவ்வாய் கிழமையன்று மாலையில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில், முன்னாள் அமைச்சர்கள் பி.வி.ரமணா, கோகுல இந்திரா மற்றும் பாலகங்கா ஆகியோருடன் மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய-நகர செயலாளர்கள், ஒன்றிய - நகர நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பின ர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டுறவு சங்க தலைவர்கள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கட்சி முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# வடசென்னை மொழிப்போர் தியாகியும், முன்னாள் திமுக கவுன்சிலர் பார்வதி நாராயணசாமி மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூலை.7-

வடசென்னை மாவட்ட திமுகவின் வழக்கறிஞர் அணி அமைப்பாளர்,முன்னாள் தினகரன் செய்தியாளர், சென்னை பெருநகர அரசு கூடுதல் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ், தாயாரும் வடசென்னை மொழிப்போர் தியாகி, முன்னள்திமுககவுன்சிலர் . என். பார்வதி(எ) பார்வதி நாராயணசாமி உடல்நலக்குறைவால் நேற்று முன் தினம் காலமானார்.



அன்னாரின் மறைவுச் செய்தியை அறிந்ததும் திமுக தலைவரும் தமிழ்நாடு அரசு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், அவரது குடும்பத்துக்கு ஆறுதலைத் தெரிவித்ததோடு இரங்கல் செய்தியும் அனுப்பியுள்ளார்.

வடசென்னை மாவட்ட திமுக செயலாளரும் சென்னை பெருநர நகரமைப்பு குழுத் தலைவருமான, தா. இளைய அருணா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, திமுக எம்.எல்.ஏ.க்கள் ஜே.ஜே. எபினேசர், ஆர்.டி.சேகர், சிபிஐ வடசென்னை மூத்த நிர்வாகி எம்.எஸ். மூர்த்தி மற்றும் திமுக பகுதி செயலாளர்கள் லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், மண்டலக் குழு தலைவர் நேதாஜி யு. கணேசன்,ஆர்.எம். டி ரவீந்தரன் ,மூத்த பத்திரிக்கையாளர் ந.ப.சேதுராமன், முருகன், ஜோசப், சு.காதர் உசேன், பால்துரை, உட்பட ஏராளமான திமுகவினர் பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் தகனம், சென்னை மூலக்கொத்தலம் இடுகாட்டில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. பின்னர் திமுக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் இறந்த பார்வதிநாராயணசாமிக்கு இரங்கல் தீர்மானம் போட்டனர், தமிழ்நாடு புதுச்சேரி பிரஸ் மீடியா நிருபர்கள் சங்கம், புதுகை வரலாறு நாளிதழ், பொன்டைம்ஸ் டிவி இணையதள தொலைக்காட்சி சார்பில் அன்னாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.




மேட்டூர் அணையில் இருந்து குருவை சாகுபடிக்காக திறந்து விடப்பட்ட தண்ணீர் கடைமடை பகுதியான காரைக்கால் மாவட்டத்திற்கு வந்தடைந்த நிலையில் நேற்று காலை 9.00 மணியளவில் நல்லம்பல் நூலாறு ரெகுலேட்டரில் இருந்து பாசத்திற்காக திருநள்ளார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.சிவா தலைமையில் திறந்து விடப்பட்டது. இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலை வகித்தார்கள். மேலும் இந்நிகழ்வில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். சிவா , இந்த பாசன நீரானது காரைக்கால் மாவட்டத்தில் 5000 ஹெக்டேர் அளவிற்கு பாசன வசதி பெரும் என்றும் கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைத்த நிலையில் இந்த ஆண்டும் விவசாயத்திற்கு குறித்த நீர் கிடைக்கும் என கூறிய சட்டமன்ற உறுப்பினர் , மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் முயற்சி எடுத்து காவிரி நீரை பெற்று தந்துள்ளார்கள் என்றும் கூறினார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் மகேஷ் மற்றும் சிதம்பரநாதன் மற்றும் துறை அதிகாரிகள் விவசாயிகள் பாசனதார்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் மதிமுக மாவட்ட செயலாளர் உட்பட பொறுப்பாளர்கள் கூண்டோடு விலகல்




சீர்காழி , ஜூலை.7-

மயிலாடுதுறை மாவட்டத்தில் மதிமுக மாவட்ட செயலாளர் உட்பட பொறுப்பாளர்கள் கூண்டோடு விலகல்.

மதிமுகவில் வாரிசு அரசியலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நிர்வாகிகள் கூண்டோடு விலகல், துரைவைகோ நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை மதிக்காமல் அராஜக போக்கில் செயல்படுவதாக குற்றச்சாட்டு:-

மயிலாடுதுறை மாவட்டத்தின் மதிமுக மாவட்ட செயலாளராக சீர்காழியைச் சேர்ந்த மார்க்கோனி என்பவர் செயல்பட்டு வந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு கட்சி விரோத செயல்களில் இவர் ஈடுபடுவதாக தெரிவித்து மாவட்டச் செயலாளர் பொறுப்பில் இருந்து மார்க்கோனி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் மதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்நேற்றுசீர்காழியில் மார்கோனி தலைமையில் நடைபெற்றது. பதவி நீக்கம் செய்யப்பட்ட மாவட்ட செயளாலர் மார்கோனி தலைமையில் ம.தி.மு.க பொறுப்பாளர்கள் 28பேர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து கூண்டோடு விலகினர்.

சீர்காழி நகரசெயலார் பாலு, மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட 28 பொருப்பாளர்கள் மற்றும் 17 வார்டு செயளாலர்கள், பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கூண்டோடு கட்சியை விட்டு விலகியதாக அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட செயலாளர் மார்கோனி, வைகோவிற்கு பிறகு தான் லண்டன் சென்று செட்டில் ஆகி விடுவதாக துரை வைகோ தெரிவித்து இருந்தார்.

கட்சிக்காக 30 ஆண்டுகளாக தாங்கள் உழைத்து வரும் நிலையில், எந்த உழைப்பும் இல்லாமல் துரை வைகோ வாரிசு அரசியலில் பதவிக்கு வந்துள்ளார். நிர்வாகிகளையும் தொண்டர்களையும் மதிக்காத நிலைமை மதிமுகவில் நிலவுவதால் கட்சியை விட்டு விலகுவதாக தெரிவித்தார்.

### 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா

# லட்சம் பேர் கலந்துகொண்ட புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்ச்சி



புதுக்கோட்டை, ஜூலை,7-

**6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு வியாழக்கிழமை நடைபெற்ற புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.**

புதுக்கோட்டை ராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரும், புத்தகத் திருவிழா வரவேற்புக்குழுத் தலைவருமான ஐ.சா. மெர்சி ரம்யா மாணவிகளுடன் அமர்ந்து ஒரு மணி நேரம் புத்தகம் வாசித்தார். அவர் பேசும்போது,

புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன, நேற்று நடைபெற்ற 'புதுக்கோட்டை வாசிக்கிறது' நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வாசிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக கிராமப்புறங்களில் உள்ள நூலகங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒருவருக்கு தன்னம்பிக்கை வளரவும், புதிய சிந்தனைகளை உருவாக்கவும் புத்தகங்கள் வாசிப்பதன் மூலமே சாத்தியமாகும்.

எனவே, மாணவ, மாணவிகள் உங்கள் நலனுக்காவும், ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்துக்காகவும் வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். படித்ததை அடுத்தவர்களோடு விவாதிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்றார்.

ஆட்சியருடன் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் கி.கருணாகரன், மாவட்ட நூலக அலுவலர் அ.பொ.சிவகுமார், புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் கவிஞர் தங்கம் மூர்த்தி, அ.மணவாளன், ஆர். ராஜ்குமார், எஸ். டி.பாலகிருஷ்ணன், மா.வீரமுத்து, ராசி. பன்னீர்செல்வம், கே.சதாசிவம், டி.விமலா, பவுனம்மாள், பள்ளியின் தலைமை ஆசிரியை தமிழரசி உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதேபோல் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாசிப்பு நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை, அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் மு.முத்துக்குமார், பள்ளித் தலைமை ஆசிரியர் வி.பரிமளம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▶ தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில், தூத்துக்குடி மாநகராட்சிக்கான இடம் அமைந்துள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் கி.செந்தில்ராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன் அவர்கள் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். அருகில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார் உள்ளார்.

## பழநி கோயிலுக்கு தானமாக வழங்கப்படும் பசுக்களை வேறு யாருக்கும் கொடுக்க கூடாது: எச்.ராஜா



பழநி, ஜூலை. 7-

பழநி முருகன் கோயிலுக்கு சொந்தமான கோசாலையில் பசுக்கள் உயிரிழக்கும் நிலையில் உள்ளன என்று தமிழக பாஜக மூத்த தலைவர் எச். ராஜா கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே கள்ளிமந்தயத்தில் உள்ள பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு சொந்தமான கோசாலையை, தமிழக பாஜக மூத்த தலைவர் எச். ராஜா பார்வையிட்டார். அப்போது, அவர் செய்தியாளர்களிடம் கூறியது: ''கோயில் நிலங்களை பொது உபயோகத்துக்கு பயன்படுத்தக் கூடாது. கோயில் நிலங்கள் ஆன்மிகத்துக்காக, இந்து மத வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

பழநி கோயில் கோசாலை 88.79 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இந்த கோசாலை ஒருங்கிணைந்த கோசாலையாகும். சிறிய கோயில்களில் தானமாக வழங்கப்படும் பசுக்களை இங்கு கொண்டு வந்து விடப்படுகிறது. இங்குள்ள பசுக்கள் உயிரிழக்கும் நிலையில் உள்ளன. சமீபத்தில் 17 பசு மாடுகள் உணவு கிடைக்காமல் இறந்துள்ளதாக மருத்துவர்கள் சான்றிதழ் கொடுத்துள்ளனர். இங்குள்ள பசுக்களை மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கொடுப்பதாக கூறி, கடந்த 3 நாட்களில் 218 பசுக்கள் திமுகவினருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

கோயிலுக்கு தானமாக வழங்கப்படும் பசுக்களை வேறு யாருக்கும் கொடுக்க கூடாது. அமைச்சர்கள் சேகர்பாபுவும், சக்கரபாணியும் பழநி முருகன் கோயிலை மொட்டையடிக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றனர்.

பழநி முருகன் கோயில் நிலத்தை மாற்று மதத்தினர் ஆக்கிரமித்து இருந்தால் ஒரு மாதத்துக்குள் மீட்க வேண்டும். இந்த மத சின்னம் அணிந்திருந்தால்தான் கோயிலுக்கு செல்ல முடியும். இது அறநிலையத் துறையின் விதி அல்ல. சட்டத்தினுடைய விதி. இந்த நிலத்தை சிப்காட் அமைக்க கொடுக்க கூடாது" இவ்வாறு அவர் கூறினார்.



▶ கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியின் சார்பில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் பூங்காவினை, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.மணிவண்ணன் அவர்கள், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசிரவிக்குமார் அவர்கள், சிவகங்கை கோட்டாட்சியர் கு.சுகிதா, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இரா.ராஜா உட்பட பலர் உள்ளனர்.

# ஆதனக்கோட்டை வீரடி விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி விழா கோலாகலம்

ஆதனக்கோட்டை, ஜூலை.7-

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையன்பட்டி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீரடி விநாயகர் ஆலயத்தில் மஹா சங்கடகர சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.



இந்த விழாவில் விநாயகருக்கு சந்தனாதி தைல அபிஷேகம் திரவியபொடி அபிஷேகம் பாலபிஷேகம் தயிரபிஷேகம் அரிசிமாவு அபிஷேகம் பஞ்சாமிர்த அபிஷேகம் சந்தன அபிஷேகம இளநீர் அபிஷேகம் பன்னீர் அபிஷேகம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் விநாயகர் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு வீரடி விநாயகர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்த சங்கடஹர சதுர்த்தி விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வீரடி விநாயகரை வழிபாடு செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.



▶ திருப்பரங்குன்றம் விளாச்சேரியில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் மு. மணிமாறன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அருகில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் முத்துராமலிங்கம், லதா அதியமான், கொம்பாண்டிதங்கம், வழக்கறிஞர் இள மகிழன், முத்துராமன், உசிலை சிவா, பெரியசாமி, தனபால், செல்வம், இளைஞர் அணி விமல், தென்பழஞ்சி சுரேஷ், ஆதவன், ஐ.டி. பிரிவு பிரபு, பெருங்குடி வசந்த், ராஜபாண்டி, விரகனூர் பாண்டி, காசி, ஜாகீர், ரமேஷ், சிவா, இளங்கோவன், கீழக்குயில் செல்வேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

# புத்தகத் திருவிழாவை முன்னிட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் புத்தக வாசிப்பு நிகழ்ச்சி



ஆதனக்கோட்டை, ஜூலை.7-

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு கல்லூரி முதல்வர் மரு. ராஜ்மோகன் அனுமதியின் பேரில் மரு. சரவணன் தலைமையில் புத்தகத் திருவிழா புத்தக வாசிப்பு என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் நம் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக்கூறும் விதமாக திருக்குறள் தெளிவுரை பாரதியாரின் கவிதைகள் அக்னிசிறகுகள் உள்ளிட்ட பல்வேறு நூல்களை மாணவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அதில் குறிப்பிட்டப்பட்ட முக்கிய தகவல்களை மரு. சரவணன் எடுத்து கூறினார்.

உலக பொதுமறையிலிருந்து ஐந்து திருக்குறளையும் படித்து விளக்கமளித்தார். அதனை தொடர்ந்து மாணவ, மாணவிகள் தமிழ் பெருமிதம் என்ற நூலிலிருந்து ஒவ்வொரு தலைப்பிலும் உள்ளவற்றை அனைவருக்கும் படித்து காண்பித்து மாணவர்கள் அறியும் வண்ணம் சிறப்பு சேர்த்தனர். நிகழ்ச்சியில் மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் சுமார் 200 மாணவர்கள் பங்கு பெற்றனர், முதலாம் ஆண்டு மாணவர் ஆகாஷ் நன்றியுரைடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

# "திமுகவின் இரண்டு ஆண்டு கால இருண்ட ஆட்சி" - இபிஎஸ் சரமாரி தாக்கு

திருச்சி, ஜூலை. 7-

"இரண்டு ஆண்டு கால திமுக ஆட்சி, இருண்ட கால ஆட்சி. இந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில், தமிழக மக்களுக்கு என்ன செய்தீரகள்?" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

திருச்சி திருவெறும்பூரில் உள்ள பெல் (BHEL) நிறுவன வளாகத்தில் எம்ஜிஆரின் முழு உருவ வெண்கலச் சிலையை, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று திறந்து வைத்தார். பின்னர் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசியது: "முதல்வர் ஸ்டாலின் எத்தனை "பி" டீம்களை உருவாக்கினாலும் அதிமுகவை அழிக்க முடியாது. அதிமுக தொண்டன் உழைக்கப் பிறந்தவன். மற்றவர்களை வாழவைக்கப் பிறந்தவன். அப்படிப்பட்ட தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சி அதிமுக. உங்கள் தலைவரைப் போல, வீட்டில் இருப்பவர்கள், குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பதற்காக எம்ஜிஆர் அதிமுகவைத் தோற்றுவிக்கவில்லை.

தமிழகத்தில் 31 ஆண்டு காலம் ஆட்சி செய்த ஒரே கட்சி அதிமுக. 31 ஆண்டு கால ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்து எம்ஜிஆரும், ஜெயலலிதாவும், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிச் சென்றுள்ளனர். ஆனால், இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின், இந்தியாவின் முதன்மை முதல்வர் தான் என்று சொல்லிக் கொள்கிறார். எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்றாக இணைத்து, மத்தியில் ஒரு ஆட்சியை ஏற்படுத்தப்போவதாக கூறுகிறார். ஸ்டாலினால் தமிழகத்தையே காப்பாற்ற முடியவில்லை. நீங்கள் எங்கே மத்தியில் காப்பாற்றப்போகிறீர்கள்?



இன்றைக்குதிமுகவைச் சேர்ந்த அமைச்சர்களும், கட்சியின் முன்னோடி நிர்வாகிகளுக்கெல்லாம் ஜுரம் வந்துவிட்டது. எங்கே வருமானவரித்துறை வரும்? எங்கே அமலாக்கத் துறைவந்துவிடுமோ என்று அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல அமைச்சர்களின் தூக்கமே போய்விட்டது. அதிமுகவையும், அதிமுக அமைச்சர்கள், நிர்வாகிகளைப் பார்த்து பாஜகவுக்கு அடிமையென்றும், வருமான வரித்துறையைப் பார்த்து பயப்படுவதாகவும், அமலாக்கத் துறையைப் பார்த்து பயப்படுவதாகவும் கூறினீர்களே, ஆனால், இப்போது யாருக்கு ஜுரம் வந்தது என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். அதிமுகவினரைப் பொறுத்தவரை, மடியிலே கனமில்லை, வழியிலே பயமில்லை.

செந்தில் பாலாஜியை கைது செய்தவுடன் அமைச்சரவையே மருத்துவமனைக்குச் சென்று அவருக்கு ஆறுதல் சொல்லும் காட்சியை அனைத்து தொலைக்காட்சியிலும் பார்த்தோம். பதறுகின்றனர், அவர்களுடைய முகத்தில் பயம் காணப்பட்டது. செந்தில் பாலாஜி அமலாக்கத் துறையிடம் ஏதாவது வாக்குமூலம் கொடுத்துவிட்டால் என்ன ஆகும் என்ற அச்சத்தில், முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தார் அனைவரும் செந்தில் பாலாஜியை சந்தித்துப் பேசுகின்றனர். அப்படியென்றால் எவ்வளவு பயம் இருக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் அவர்களே, செந்தில் பாலாஜி மட்டும் வாய் திறந்தால் நீங்கள் இருப்பது கோட்டை அல்ல.

இரண்டு ஆண்டு கால திமுக ஆட்சி இருண்ட கால ஆட்சி. இந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில், தமிழக மக்களுக்கு என்ன செய்தீரகள்? இரண்டு ஆண்டுகளில் திமுக அமைச்சர்கள் கொள்ளை அடித்ததுதான் மிச்சம். முதல்வர் ஸ்டாலினின் குடும்பம் கொள்ளை அடித்ததுதான் மிச்சம். அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஒரு ஆடியோ மூலம் கருத்தை தெரிவிக்கிறார். சபரீசனும், உதயநிதி ஸ்டாலினும், 30 ஆயிரம் கோடியை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியை சொல்கிறார். சமூக வலைதளத்தில் இந்த ஆடியோ பரவியது. இன்று வரை முதல்வர் ஸ்டாலின் அதற்கு பதில் சொல்லவில்லை" என்று அவர் பேசினார்.

### சிறுநீர் கழித்து அவமதிக்கப்பட்டவரின்

# கால்களை கழுவிய முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான்

**மத்தியபிரதேசம், ஜூலை. 7-**

மத்தியப் பிரதேசத்தில் பாஜக நிர்வாகியால் சிறுநீர் கழித்து துன்புறுத்தப்பட்ட நபரின் கால்களைக் கழுவி முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் மன்னிப்பு கோரினார்.



மத்தியபிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் ஏழை, பழங்குடியின தொழிலாளி தஷ்மத் ராவத் மீது பாஜக நிர்வாகி பிரவேஷ் சுக்லா சிறுநீர் கழித்த வீடியோ நாட்டையே உலுக்கியது. இதையடுத்து, தேசிய பாதுகாப்பு சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பிரவேஷ் சுக்லா கைது செய்யப்பட்ட நிலையில், அவரது வீடும் புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டது. இந்நிலையில், போபாலில் உள்ள தனது வீட்டுக்கு பாதிக்கப்பட்ட தஷ்மத் ராவத்தை வரவழைத்த முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், அவரது கால்களில் தண்ணீர் ஊற்றி கழுவிவிட்டு வணங்கினார்.

அவருக்கு சந்தனம் வைத்து, மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்திய முதலமைச்சர் சிவ்ராஜ் சிங், நினைவுப்பரிசு வழங்கி இனிப்பு ஊட்டிவிட்டார். இதையடுத்து, தஷ்மத் ராவத்துடன் உரையாடிய முதலமைச்சர் சிவ்ராஜ் சிங், வீடியோவைப் பார்த்து மிகவும் வேதனையடைந்ததாக கூறினார். அதற்காக தான் மன்னிப்பு கோருவதாக குறிப்பிட்ட அவர், மக்கள் தனக்கு கடவுளைப் போன்றவர்கள் என தெரிவித்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# அதிமுக எம்.பி. வெற்றி செல்லாது சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

# அதி கனமழை கேரளா, கர்நாடகாவுக்கு ரெட் அலர்ட் : இயல்பு வாழ்க்கை பாதிப்பு





# துணைவேந்தர்கள் நியமனம் தாமதத்திற்கு ஆளுநரே காரணம்


சென்னை / புதுக்கோட்டை | 07.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

07.07.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

இரட்டைமலை சீனிவாசன் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1859) (இ.1945)



அரு. ராமநாதன் , தமிழக பத்திரிகையாளர், திரைவசன எழுத்தாளர் (பி.1924) (இ.1974)



மகேந்திரசிங் தோனி , இந்தியத் துடுப்பாளர் (பி.1981)



ஞானேந்திரா , நேபாளத்தின் கடைசி மன்னர் (பி.1947)



## இன்றைய நினைவு நாள்

கா. மு. ஷெரீப் , விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1914) (இ.1994)



ஜி. வெங்கடசாமி , தமிழக கண் மருத்துவர், தொழிலதிபர் (பி.1918) (இ.2006)



## உலக சாக்கலேட் நாள்